தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 15, ஸ்ரீமுக — திருவள்ளுவர் ஆண்டு 2024.

1993, ஏப்ரல் 28, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்''

ஒரு செயலை செய்து முடிக்க விரும்புவோர் வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம் மேற்கொண்ட வினை உரிய இடம் ஆகிய ஐந்தினையும் குற்றமற எண்ணிச் செய்யவேண்டும்.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. ஆர். சுவாமிநாத மேற்கொண்டார் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஆர். சுவாமிநாத மேற்கொண்டார் அவர்கள் 22–4–1993 அன்று மறைவுற்றது குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. ஆர். சுவாமிநாத மேற்கொண்டார் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு மிகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அன்னாரது மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. இயற்கை எய்திய இப்பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் பொருட்டு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.)